

பிரிட்டிஷ் கொலம்பியா தமிழ் கலாச்சாரச் சங்கம்
Thamil Cultural Society of British Columbia
வாழ்க தமிழ்! வளர்க தமிழ் கலாச்சாரம்!

அன்பான எனது தமிழ் மக்களே!!

நமது தமிழ் கலாச்சாரச் சங்கத்தின் வெள்ளி விழா ஆண்டின் தலைவராகத் தேர்ந்தெடுத்து, தமிழ் மொழி மற்றும் தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய எனக்கு வாய்பளித்த அனைத்துச் சங்க உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அனைத்து புதிய சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, இந்த நடப்பு நிர்வாகக் குழு நமது சங்க வளர்ச்சிக்காகவும், நமது தாய் மொழி மற்றும் கலாச்சாரத்தை வளர்க்க உறுதுணையாக இருந்து தமது பணியை செவ்வனே செய்யும் என உறுதி மொழி அளிக்கிறோம்.

நமது கலாச்சாரச் சங்கம் கடந்த 25 ஆண்டுகளாகத் தனது தமிழ்ச் சேவையை இனிதே செய்து, இந்த ஆண்டு வெள்ளி விழா ஆண்டாகக் கொண்டாட கனேடிய தமிழர்களாகிய நமக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது. குறிப்பாக நமது சங்கம் கடந்த 25 ஆண்டுகளாக வன்கூவர் மற்றும் 19 ஆண்டுகளாக சரேயிலும் தமிழ் பாடசாலைகளை நடத்தி நமது குழந்தைகளுக்கு தமிழ் மொழி மற்றும் தமிழ் கலாச்சாரத்தை கற்பிக்கும் சேவையை இனிதே செய்துக் கொண்டுயிருக்கிறது. இதற்கு ஊன்றுகோலாக, உறுதுணையாக இருக்கும் அனைத்து ஆசிரியைகள், பள்ளி முதல்வர்கள் மற்றும் சங்க இணைப்பாளர்கள், மேலும் பெற்றோர்கள் அனைவருக்கும் எனது பாராட்டினையும், வாழ்த்துகளையும் கூறி மென்மேலும் சிறப்பாகச் செய்ய நாம் அனைவரும் ஒற்றுமையாகச் செயல்படுவோம்.

மேலும் இந்த வெள்ளி விழா ஆண்டை சிறப்பாகக் கொண்டடும் வகையில் வரும் ஏப்ரல் 27ந் தேதி இசைநிகழ்ச்சி நடத்த உள்ளோம்.. இந்த இசைநிகழ்ச்சியை மாபெரும் விழாவாகக் கொண்டாட உங்களின் ஆதரவை தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக நமது சங்கத்திற்குப் புது அங்கத்தவர்களை வரவேற்று, அறிமுகப்படுத்தி நமது சங்கத்தை மேலும் பலப்படுத்த உங்களை வேண்டிக்கொள்கிறேன். மேலும் நமது சங்கம் தற்போது வங்கிக் கடன் அனைத்தையும் கட்டி முடித்து கடந்த ஆண்டு அதை தன்னுடைமை ஆக்கிக்கொண்டது என்பதைப் பெருமையாக உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். அடுத்து சங்கக் கட்டிட நிதி சேர்க்கும் வகையில் இப்போதுள்ள வருடாந்திர அங்கத்தவர்களை வாழ்நாள் அங்கத்தவர்களாக மாறி நமது சங்க கட்டிடம் உருவாக ஆதரவு தர உங்களை இருகரம் கூப்பி கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நாம் அனைவரும் ஒன்று கூடி எந்த வித வேறுபாடின்றி ஒற்றுமையாகச் செயல்பட்டு சங்க வளர்ச்சிக்குப் பணிபுரிய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

சிவகுமார் சந்திரசேகரன்

தலைவர்,

பிரிட்டிஷ் கொலம்பியா தமிழ் கலாச்சாரச் சங்கம்.